**24.03.2026**

OS. No. 257/2010

பக்கம் – 3

DW2 – ரமேஷ் பாபு

**வாதியின் தரப்பில் குறுக்கு விசாரணை**

வாதி என்னுடைய தங்கை ஆவார். தாவா சொத்து பாகம் கோரி வாதி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்தில் ஒரு சில சொத்துக்கள் என்னுடைய தந்தையின் பெயரிலும் சில சொத்துக்கள் வாதி மற்றும் பிரதிவாதிகள் பத்து வரையானவர்களின் பெயரிலும் உள்ளது என்றால் அது குறித்து எனக்கு தெரியாது. இவ்வழக்கில் வாதிக்கோரிய படி சரிசமமான பங்கு அனைவருக்கும் வழங்கப்படக் கூடாது என்றும் எனக்கு அதிகப்படியான பங்கு வழங்கப்பட வேண்டும் என்பதுதான் என்னுடைய கோரிக்கை என்றால் சரிதான். நான் பி.டெக் படிப்பு படித்துள்ளேன். 1975 ஆம் ஆண்டு பி.டெக் படிப்பை முடித்தேன். எங்களுடைய குடும்பத்தில் நான் மட்டும்தான் பட்டப்படிப்பு படித்துள்ளேன் என்றால் சரிதான். செப்டம்பர் மாதம் 1975 ஆம் ஆண்டு எனக்கு வேலை கிடைத்தது. முதன்முதலில் நான் மாத சம்பளமாக ரூபாய் 590/–யை நான் பெற்றேன். 1991 ஆம் ஆண்டு என்னுடைய மாத சம்பளம் ரூபாய் 12,000/– ஆகும். நான் என்னுடைய பணியை ராஜினாமா செய்யும்பொழுது மாத சம்பளம் ரூபாய் 18000/– ஆகும். 1991 ஆம் ஆண்டு நான் மத்திய பிரதேச மாநிலத்தில் என்னுடைய மனைவியுடன் தனியாக வசித்து வந்தேன். என்னுடைய குடும்பத்தில் நானும் என்னுடைய மனைவியும் என்னுடைய மகளும் மூன்று நபர்கள் மட்டும்தான். மாத சம்பளம் நான் ரூபாய் 12000/– பெற்ற போது எங்கள் மூவருக்காக வேண்டி ரூபாய் 11,700/– மாதம் ஒதுக்கிக்கொண்டு வெறும் 300/– ரூபாயை என்னுடைய தந்தைக்காக அனுப்பி வைத்தேன். என்னுடைய தந்தைக்கு மாதம் ரூபாய் 300/– அனுப்புவது தொடர்பாக எந்த ஒரு வற்புறுத்தலும் எனக்கு யாராலும் வழங்கப்படவில்லை. என்னுடைய சொந்த விருப்பத்தின் பெயரில்தான் அந்த பணத்தை நான் என்னுடைய தந்தைக்காக வேண்டி செலுத்தி வந்தேன். என்னுடைய தந்தை நான் கூட்டுக் குடும்பத்திற்காக

வேண்டி அதிகமாக செலவு செய்ததாக எனக்கு அதிகப்படியான சொத்து பாகப்பிரிவினையின் போது வழங்கப்பட வேண்டும் என்று ஏதாவது எழுத்து மூலமாக கடிதம் எதுவும் கொடுத்துள்ளாரா என்றால் இல்லை. எங்களுடைய கூட்டு குடும்ப சொத்து இதுநாள் வரையிலும் கூட்டுக் குடும்ப சொத்தாக தான் உள்ளது. யாரும் பிரித்துக் கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் கூட்டுக் குடும்ப சொத்துக்கள் என்ற காரணத்தினாலும் அதனை சரிசமமாக தான் பிரிக்க முடியும் என்றும் என்னுடைய வேண்டுகோளின்படி எனக்கு அதிகப்படியான பாகம் ஒதுக்க முடியாது என்றால் சரியல்ல.

(9, 10, 12, 13, 17 மற்றும் 19 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)

**(2ம் பிரதிவாதியின் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது)**

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்